பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 18 உ செவ்வாய்க்கிழமை (02-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 209

# ஸ்ரீலங்கா விவகாரம்: இந்திய அரசு ஆராய்வு

## புதிய அணுகுமுறையை நிர்ணயிக்க புதுடில்லியில் உயர்மட்ட ஆலோசனை

கொழும்பு, ஜூலை 2

ஸ்ரீலங்கா அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் விவகாரத்தில் புதிய இந்திய அரசு கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை குறித்து முடிவு செய்வதற்காக புதுடில்லியில் உயர் மட்ட ஆலோசனை நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ராஜீவ் காந்தியின் கொலையை அடுத்து எழுந்துள்ள நிலைமை—

இந்திரா காங்கிரஸின் சிறுபான்மை அரசு நிலைத்து நிற்க ஆதரவளிக்கக் கூடிய கட்சிகள், வெளிவிவகார விடயங்களில் மேற்கொள்ள விரும்பும் போக்கு—

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தொடர்பாக தற்போதுள்ள சூழ்நிலை —

ஸ்ரீலங்கா அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய இரண்டும் தொடர்பாக எழுந்துள்ள நிலைப்பாடு ஆகியவை குறித்து இந்திய அரசு உயர் மட்டத்தில் ஆராய்ந்து வருகிறது.

இவற்றின் அடிப்படையில் இந்திய அரசின் புதிய அணுகுமுறை தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்திய நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை எதிர்வரும் 11 ஆம் திகதி ஜனாதிபதி வெங்கட்ராமன் சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கும்போது அவர் நிகழ்த்தவிருக்கும் கொள்கை விளக்க உரையில் வெளிவிவகாரம் தொடர்பாக புதிய அரசின்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப... 'ஓடினவையளுக்கு ஒ நுங்க இடம் கிடைச்சிட்டுது எண்டு சொல்லுங்கோ...!

## மண்ணெண்ணெய் இங்கே கொண்டுவர அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 2

வவுனியாவில் இருந்து மண்ணெண்ணெய் எடுத்து வருவதற்குப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை வவுனியாவில் படை அதிகாரிகள், அரச அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தை அடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பயணிகள் 5 லீற்றர் மண்ணெண்ணெய்யையும், கட்டுப்பாடு எதும் இல்லாது தேங்காய் எண்ணெய்யையும் எடுத்துச் செல்ல அனுமதிப்பதென கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ஓ-3)

## நிவாரணநிதி நேரடியாக இனி அரச அதிபர்களிடம்!

யாழ்ப்பாணம், ஜூலை 2

நிவாரணம், புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி இனிமேல், சகல தமிழ் மாவட்டங்களுக்கும் கொழும்பிலிருந்தே நேரடியாக அனுப்பிவைக்கப்படும்.

மாகாண சபை முறை அமுலுக்கு வந்த பின்னர், மேற்கூறிய நடவடிக்கைகளுக்கு உரிய நிதித் தொகைகள் கொழும்பில் இருந்து, திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டு—

பின்னர் அங்கிருந்து ஒவ்வொரு மாவட்ட அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டு வந்தது.

அந்த நடை முறையினால் நிதி உரிய நேரத்தில் வந்து சேராமல் தாமதம் ஏற்பட்டு வந்தது. தமிழ் மாவட்டங்களில் நிவாரண, புனர்வாழ்வு வேலைகளை உரிய வேளையில் செய்ய முடியாமல் அரச அதிபர்கள் கஷ்டமுறுகின்றனர்.

இதனைத் தவிர்க்கு முகமாகவே மாவட்டங்களுக்குரிய நிதித்தொகைகளை அரச அதிபர்களுக்கு நேரடியாக அனுப்பி வைக்க முடிவாகியுள்ளது. (அ-3)

## பலத்த பாதுகாப்புடன் தமிழக சட்டசபை கூடியது

### ஜெயலலிதாவும் பதவிப்பிரமாணம்

சென்னை, ஜூலை 2

தமிழ்நாடு சட்டசபையின புதிய கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமானது.

புதிய உறுப்பினர்களுக்குத் தற்காலிகத் தலைவர் திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

முதலில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

நேற்று சட்டசபைக் கட்டடத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நாளை மறுதினம் நான்காம் திகதி காலை புதிய சட்டசபைக் கூட்டத் தொடரை மாநில ஆளுநர் பீஷ்ம நாராயணசிங் ஆரம்பித்து, அங்குரார்ப்பண உரையை நிகழ்த்துவார். (ஓ-எ)

## ஸ்ரீலங்கா படையினர் சூடு:

## தமிழக மீனவர்கள் நால்வர் அல்லைப்பிட்டிக் கரையில்!

யாழ்ப்பாணம், ஜூலை 2

தமிழ்நாட்டைச் சேர்ந்த 4 மீனவர்கள் நேற்று முன்தினம் அல்லைப்பிட்டிப் பகுதியில் கரை சேர்ந்தனர்.

கன்னியாகுமரி மாவட்டம் திருவல்லிக்கேணி ஜில்லாவைச் சேர்ந்த சி. சுவானந்த பெருமாள், சி. வெட்டும் பெருமாள், நா. இராசபாண்டி, கி. முருகேசன் ஆகியோரே அந்த நால்வரும் ஆவர்.

கடந்த 26ஆம் திகதி கச்சதீவுக்குச் சமீபமாக மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது படகு பழுதடைந்து விட்டது. அதை அடுத்து படகு நடுக்கடலில் நங்கூரமிடப்பட்டிருந்தது.

29ஆம் திகதி பலமான காற்று வீசியதால், படகு இலங்கை கடற் பிராந்தியத்திற்குள் இழுத்து வரப்பட்டதாம்

அப்போது திடீரென ஸ்ரீலங்கா கடற்படையினர் படகை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோ

[2 ஆம் பக்கம் பார்க்க]

# திடீர் தேர்தல் நடக்க வாய்ப்பு?

திடீர் தேர்தல் ஒன்றை நடத்த அரசாங்கம் தயாராகி வருவதாக கொழும்பில் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

''எந்த நேரத்திலும் தேர்தல் ஒன்றைச் சந்திக்கத் தயாராக இருக்கும்படி ஜனாதிபதி எங்களைக் கேட்டுள்ளார்'' — என்று தகவல் துணை அமைச்சர் ஏ. ஜே ரணசிங்கா தெரிவித்தார்.

திரு ரணசிங்கா மேலும் சொன்னதாவது;

தேர்தலை நடத்த தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நடத்தப்படும் தேர்தல் நாடாளுமன்றத் தேர்தலாக இருக்குமா என்பது பற்றி கருத்துத் தெரிவிக்கமாட்டேன்.

அது நாடாளுமன்றத் தேர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பைப் பாதுகாக்க 400 தமிழ் இளைஞர்கள்!

கொழும்பு, ஜூலை 2

கொழும்பில் ஸ்ரீலங்காப் படையினருடன் இணைந்து சுமார் நானூறு தமிழ் இளைஞர்கள் பாதுகாப்புக கடமையில் ஈடுபடுவர் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஈ. பி. ஆர். எல். எவ்., ரெலோ, ஈ. பி. டி. பி., புளொட் ஆகிய குழுக்களைச் சேர்ந்த நானூறு இளைஞர்களைப் பாதுகாப்புப் படையுடன் சேர்த்து சேவையில் ஈடுபடுத்த ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்திருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் இணைப்பதிகாரி பிரிகேடியர் பி. கே. வி. பெரேரா தலைமையில் கடந்த வெள்ளியன்று கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்பு சம்பந்தப்பட்ட மாநாட்டில் இந்த முடிவுஎடுக்கப்பட்டதாக அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (உ)

## கொக்கட்டிச்சோலை கொடூரம்:

## வீட்டுக்குள்புகுந்தபடையினர் பெண்களை கற்பழித்தனர்!

### உயிர் தப்பியவர் பேட்டி

லண்டன், ஜூலை 2

''படையினர் கண்டபடி சுட்டுக்கொண்டு வந்தனர். அவர்களுக்கு அஞ்சி சுமார் 150 பேர் ஒரு வீட்டில் தஞ்சம் புகுந்திருந்தனர். அந்த வீட்டுக்குள் நுழைந்த படையினர் பெண்களின் நகைகளை அறுத்து, இளம் பெண்களைக் கற்பழித்தனர்: வீடுகளைத் தீமூட்டி ஆண்களை அதற்குள் தூக்கிப் போட்டனர். நான் ஒருவாறு தப்பி ஓடினேன்.''

கொக்கட்டிச்சோலை சம்பவத்தில் சிக்கி உயிர் தப்பிய ஒருவர் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவுப் பகுதியில் நேற்று விமான குண்டுவீச்சு

ஆனையிறவு முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்றுக் காலை முதல் மாலை வரை இரு பொம்மர்கள், அவ்ரோ விமானம் ஆகியன குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

பொம்மர்கள் குண்டுகளை வீசிக்கொண்டிருந்த வேளையில் நான்கு ஹெலிகள் மாறி, மாறி முகாமில் தரையிறங்கி ஏறியதாகச் சொல்லப்படுகிறது.

ஹெலியிலிருந்தும் கலியர் தாக்குதல் நடத்தப்பட்டது.

முகாமில் இருந்து ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. (ஓ-117-3)

## காங்கிரஸுக்குள் லடாய்?

புதுடில்லி, ஜூலை 2

இந்தியாவில் ஆளும் காங்கிரஸ் கட்சி தலைவர்களிடையே இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் தலைவரும் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் (பிரதமரும்) ஒருவராக இருக்க வேண்டுமா என்ற கேள்வி கட்சிக்குள் இழுபறி நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

முன்னாள் பிரதமர்களான இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோர் இரு பதவிகளையும் வகித்து வந்தனர்.

ஆனால் பி. வி. நரசிம்மராவ் ஒரு பதவியை மட்டுமே

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஏப். 18 இல் சென்னை வந்தபோது

## மரீனா கடற்கரையிலும் ராஜீவைக் கொல்ல முயற்சி!

புதுடில்லி, ஜூலை 2

கடந்த ஏப்ரல் 18 இல் சென்னை மரீனா கடற்கரையில் நடந்த கூட்டம் ஒன்றில் திரு. ராஜீவ் காந்தி பேசிக்கொண்டிருந்த சமயம் அவரைக் கொலை செய்ய முதலாவது முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றும், அது சரிவராமற் போய்விட்டது என்றும் ''இன்டியா ருடே'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருப்பதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. மே 12 ஆம் திகதி வி. பி. சிங் மற்றும் கருணாநிதி கலந்து கொண்ட கூட்டத்தில் தற்போது ராஜீவைக் கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் பெண், கருணாநிதியின் காலைத் தொட்டு வணங்கினார் என்றும்—

மே 21 ஆம் திகதி ஸ்ரீபெரும்புதூரில் அதே பெண் ராஜீவ் காந்தியின் காலைத் தொட்டுக் கும்பிட்டு, பின்னர் குண்டை வெடிக்க வைத்து, படுகொலையில் ஈடுபட்டார் என்றும் 'இன்டியா ருடே' தெரிவித்துள்ளது.

இச் செய்தி ஓரளவு உண்மையானது என புலன் விசா

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை விவகாரம்:

## ஆணையாளரின் உத்தரவு கொலையாளிக்கு உதவியதா?

புதுடில்லி, ஜூலை 2

ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவதற்கு சரியாக ஆறு நாட்களுக்கு முன்னர் தலைமைத் தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் அனைத்து மாநில அரசுகளுக்கும் விடுத்த உத்தரவு கொலையாளிக்கு பெரிதும் உதவியாக அமைந்ததா?

— இவ்வாறு இப்போது கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

'தேர்தல் பணிக்காக பிரதமர், முன்னாள் பிரதமர்கள், இதர அமைச்சர்கள் உங்கள் பகுதிக்கு வந்தால் அவர்களுக்கு அதிகாரபூர்வ மரியாதைஅளிக்கவேண்டாம்' என டி. என். சேஷன் மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவு பிரதமர், முன்னாள் பிரதமர்கள் மற்றும் இதர அமைச்சர்கள் ஆகியோருக்கு மாநில அரசுகள் உத்தியோகபூர்வமாக அதிகளவு பாதுகாப்பை வழங்க முடியாத நிலையை

[2 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கடந்த மாதம் 19 ஆம் திகதி தட்டாதெரு சந்திக்கும் ஓட்டுமடம் சந்திக்கும் இடையில் ஒரு பையுடன் சுருக்கெழுத்துப் புத்தகம், பணப்பைகள் இரண்டு, பொ. ரஜனி ஆகிய எனது தேசிய மற்றும் சென் ஜோன்ஸ் அடையாள அட்டைகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (17374)

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரை கலந்தாலோசியுங்கள் ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்பாக) தினசரி பகல் 9-00 மணி தொடக்கம் 3-00 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (17350)

### யந்திரம்

செவ்வாய் தோஷமுள்ளவர்களுக்கு ஆடி மாதத்தில் ஜெபிக்க வேண்டிய மங்கள சண்டி யந்திரம் விவாகத் தடையை நீக்கி இல்வாழ் வைத் தரும். சாதகத்துடன் ஜூலை 10ஆம் திகதிக்கு முன் வரவும். விவாகம் நடைபெறா விட்டால் டணம் திரும்பப் பெற உத்தரவாதம். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, நல்லூர். (17352)

## வீட்டுக்குள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாவது:-

''படையினர் அன்றுகாலை முதல் கிராமத்துக்குள் புகுந்து சுட்டபடி மிருகத்தனமாக ஆண்களையும், பெண்களையும் தாக்கினார்கள் காடைத்தனத்தில் ஈடுபட்டனர். பொல்லுகளாலும் கூர்க்குக் கட்டுகளாலும் தாக்கினார்கள்.

கோவிலில் தஞ்சமடைந்திருந்தவர்களும் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

அன்றிரவு நான் வீட்டுக்குத் திரும்பிபோது அப்பகுதியில் 47 பேரின் சடலங்கள் கும்பலாகக் காணப்பட்டன.

இரவு நானும், மகளும் அந்தக் கும்பலுக்கு அருகில் தான படுக்கவேண்டி ஏற்பட்டது.'' என்றும் அவர் சொன்னார். (உ-3)

## தமிழக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கம் செய்தனர் என்றும் —

தாங்கள் படகின் அடித்தளத்தில் பதுங்கி ஒளித்துத் தப்பிக் கொண்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து நான்கு தினங்கள் உணவு, நீர் ஏதுமின்றி நடுக்கடலில் தத்தளித்த அவர்கள் நால்வரும் சேதமுற்ற படகுடன் நேற்று முன்தினம் அல்லைப்பிட்டிக்குச் சமீபமாக கரை ஒதுங்கினர். (ஒ-125)

## அறிவித்தல்

1946-10-22ஆம் திகதிய ஆணைக்குழு Commission) அறிக்கையின் படியும் 1946-07-22ஆம் திகதியின் 2480 ஆம் இலக்க வழக்கில் யாழ். மாவட்ட நீதிமன்றத் திர்ப்பின் படியும், எனது மூதாதையரின் 1951ஆம் ஆண்டு பங்குனி மாதம் 6ஆம் திகதி 482ஆம் இலக்க உறுதிப் படியும் மூளாய் வரதன்புலோ மூத்த விநாயகர் (சித்தி விநாயகர்) ஆலயத்தின் பரம்பரைத் தர்மகர்த்தாவும் மனேஜருமாகிய கந்தையா குமாரசாமி ஆகிய நான் தரும் அறிவித்தலாவது:

யான் பொறுப்பேற்ற காலம் தொடக்கம் எனக்கு உதவியாகவும் பங்கு பற்றி நடத்தவும் ஒரு ஆலோசனைச்சபை இருந்து வந்தது. 1991-01-21ஆம் திகதிய 4771ஆம் இலக்க உறுதிப் படி நிரந்தர உபயகாரரை கொண்ட மூளாய் மூத்தவிநாயகர் (சித்தி விநாயகர்) நம்பிக்கை தர்ம (Charitable Trust) தேவஸ்தான சபை ஒன்று பதிவு பெற்று ஆரம்பமாகிவிட்டது.

க. குமாரசாமி,
தலைவர்.

01-07-1991. [0211]

## உணவுக் கப்பல்

யாழ்ப்பாணம், ஜூலை 2

பலமாத இடைவெளிக்குப் பின்னர் முல்லைத்தீவுக்கு கப்பல் மூலம் உணவுப் பொருள்கள் எடுத்துச்செல்லப் பட்டுள்ளன.

## ஆணையாளர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தியதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

டி என். சேஷனின் உத்தரவை அறிந்து அமைச்சரவைச் செயலாளர், உள்துறை அமைச்சகம் மற்றும் புலனாய்வு அமைப்பினர் அதிர்ச்சி அடைந்தனர் என்றும்—

மோசமான விளைவுகளைத் தடுக்க அவர்கள் உடனடியாக இந்த விவகாரத்தில் தலையிட்டனர் என்றும் இப்போது தெரியவருகிறது.

இதனையடுத்து பிரதமரைப் பொறுத்தவரை மட்டும் தமது உத்தரவை சேஷன் விலக்கிக் கொண்டார் என்றும்—

ராஜீவ் விடயத்தில் தமிழகத்தில் அவரது உத்தரவு கடைப்பிடிக்கப்பட்டது என்றும்—

இது கொலையாளிகளுக்கு வாய்ப்பாக அமைந்தது என்றும் சொல்லப்பட்டது. (உ)

## மரீனா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரணையாளர்கள் தெரிவித்ததாக ஏ. எப். பி. செய்தியாளர் கூறினார் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது (ஒ-எ)

## காங்கிர...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கவேண்டும் என்று மூத்த உறுப்பினர்கள் சிலர் கட்சித் தலைமைப்பீடத்திடம் மனுச் செய்துள்ளனர். இதுகுறித்து ஆராய விரைவில் கட்சியின் செயற்குழு கூடவிருக்கிறது.

இதேவேளை—

கட்சியின் ராஜ்ய சபைத் தலைவர் பதவியிலிருந்து பி. சிவசங்கர் இராஜினாமாச் செய்திருப்பது, மூத்த தலைவர்களிடையே ஏற்பட்டுள்ள அதிருப்தியை வெளிப்படுத்துவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. (உ-3)

## அறிவித்தல்

### ஹோம் பினான்ஸ் யாழ். கிளை
### பண வைப்பாளர் சங்கம்

சங்கத்தின் இடைவிடாத முயற்சியினால் வைப்பாளர் தங்களது வைப்புப் பணத்தை கொழும்பு செல்லாது இங்கு மீளப் பெறுவதற்கு மத்திய வங்கி உதவி இயக்குனர் வைப்பாளர் நலன் கருதி கீழ்க்காணும் ஒழுங்குமுறைகளைச் செய்துள்ளார் என்பதை அறியத் தருகின்றோம்.

1. வைப்பாளர்கள் ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்டுக்கு நேர்முகமாகச் சமுகம் கொடுக்க முடியாதவிடத்து உறுதிமொழிப் பத்திரங்கள் வைப்பாளர்களால் கொடுக்கப்பட்ட அவர்களது முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
2. வைப்பாளரினது அடையாளம் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு வங்கியின் முகாமைபாளரினாலோ அன்றேல் வழக்கறிஞர் ஒருவரினாலோ அன்னாரின் உத்தியோக முத்திரை இடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டு ஹோம் பினான்ஸ் கம்பனிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
3. கொடுப்பனவுக்குரிய காசோலை அவரவரால் கொடுக்கப்பட்ட முகவரிகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

—செயலாளர்.

இல. 80, அரசடி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (17372)

## ஸ்ரீலங்கா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாடு மேலோட்டமாக—கொள்கை ரீதியாக—தெரிவிக்கப்படும் என்றும்—

அந்த உரையில் ஸ்ரீலங்கா விவகாரம் சம்பந்தமான புதிய அரசின் அணுகுமுறை கோடிட்டுக் காட்டப்படலாம் என எதிர்பார்க்கலாம் என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

### அமெரிக்க வானொலி

இதற்கிடையில்—

ஸ்ரீலங்காவின் மேற்குக் கரையோரத்தில் ''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'' வானொலி நிலையத்தை அமைக்க அனுமதிக்கும் விடயத்தில் ஸ்ரீலங்கா அரசு ''விடாப்பிடியாக'' இருப்பது புதிய இந்திய அரசுக்கு எரிச்சலைத் தந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிலிப்பீன்ஸில் அண்மையில் ஏற்பட்ட எரிமலைக் குமுறலினால் அப்பகுதியில் இருந்த அமெரிக்க இராணுவத் தளம் ஒன்று முற்றாகப் பாதிக்கப் பட்டிருப்பதாகவும் —


அதனால் அமெரிக்காவுக்கு இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இராணுவ தொலைத் தொடர்பு விடயத்தில் ஏற்பட்டிருக்கும் பின்னடைவை சமாளிப்பதற்காகவே. ஸ்ரீலங்காவில் வானொலி நிலையம் அமைக்கும் விடயத்தில் அமெரிக்கா அவசர சிரத்தை காட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவுக்கு வானொலி நிலையம் அமைக்க இடமளிப்பதன் மூலம், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அதிக நிதி உதவியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று ஸ்ரீலங்கா அரசு நம்புவதாகவும் —

தற்போதைய யுத்தத்தினால் ஸ்ரீலங்கா அரசுக்கு ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசுக்கு வேறு வழியில்லை என்றும் அவதானிகள் சுட்டிக் காட்டினர். [உ]

# நினைவஞ்சலி







| | | |
|---|---|---|
| வீரவேங்கை சரத்பாபு | கரும்புலி கப்டன் மில்லர் | லெப்டினன்ட் பொஸ்கோ |
| (சுந்தரலிங்கம் சுந்தரகுமார்) | (வல்லிபுரம் வசந்தன்) | (கணபதி சிறிரஞ்சன்) |
| வீர மலர்வு: 05 - 12 - 1970 வீர மரணம்: 30 - 09 - 1990 | வீர மலர்வு: 01 - 01 - 1966 வீர மரணம்: 05 - 07 - 1987 | வீர மலர்வு: 15 - 04 - 1969 வீர மரணம்: 01 - 04 - 1991 |

நாளை மலரும் தமிழீழம் விடுதலைப் பாடல் பாடும் நாள்
வணங்கும் எங்கள் மாவீரர் சமாதிகள் கோயில் ஆகிவிடும்
எழுதும் வரலாறு எங்கள் வீரரே உங்கள் புகழ்பாடும்
அசையும் புலிக்கொடி உங்களுக்கு அஞ்சலி தந்து மகிழ்ந்திருக்கும்

துன்னாலை.

- நண்பர்கள்.

இன்று மாலை துன்னாலை தாமரைக்குளத்தில் நினைவஞ்சலிக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். அனைத்து [illegible] வருக வருக என அன்புடன் அழைக்கின்றோம்.

[17373]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சொந்தப் பாட நூல்கள்

தமிழர்களின் உண்மையான, சரியான வரலாறுகளை மாணவர்களுக்குப் புகட்டும் முகமாக, இங்கேயே வரலாற்றுப் பாட நூல்களை எழுதும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அந்த முயற்சிகளில் ஒன்றாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் வரலாறு சம்பந்தமான ஆய்வரங்கு ஒன்றும் நடைபெற்றிருக்கிறது.

முன்னர் அரசாங்க பாடநூற் சபை வெளியிடும் நூல்களுடன், தமிழ்க் கல்விமான்கள், ஆசிரியர்களால் எழுதப்பட்ட துணை நூல்களைப் படிக்கக் கூடிய வாய்ப்புத் தமிழ் மாணவருக்கு இருந்தது. அதனால் அப்போதைய மாணவர்கள் உண்மையான வரலாறுகளைக் கற்றுணர முடிந்தது.

ஆனால் இப்போது நிலைமை முற்றாக மாறிவிட்டது. இலவசப் பாடநூல் விநியோகம் நடைமுறைக்கு வந்ததோடு அரசாங்கம் வெளியிடும் பாடநூல்கள் மட்டுமே பாடவிதானங்களை முழுக்க முழுக்க ஆக்கிரமித்துள்ளன.

இந்த ஆக்கிரமிப்பு, தமிழ் மாணவர்களுக்கே தமிழ் வரலாறுகளைத் திரித்துப் புகட்டும் கபடத்தனமாகவும், நயவஞ்சகமாகவும் மாறிவிட்டது. தமிழ் மாணவர்களிடம் இருந்து தமிழர்களின் பெருமைகளையும், சிறப்புகளையும் வேண்டுமென்றே மறைத்து, சிங்கள திரிபுவாதத்தைப் புகட்டும் வம்புத்தனம் நடந்து வருகிறது.

இதனை அனுமதிப்பது ஆபத்தானது. எங்கள் எதிர்காலச் சந்ததியினர் தங்கள் சொந்த இனத்தின், மண்ணின் வரலாற்றைத் தவறாகச் சீரணித்தால் அதனால் ஏற்படும் விளைவுகள் இனச் சீரழிவுக்கும், சிதைவுக்கும் வழி செய்யும்.

ஓர் இனம் வாழ்வதற்கு சொந்த மண்ணும், மொழியும், கலை கலாசாரங்களும், சமயங்களும் எவ்வளவு பிரதானமோ அவற்றைப் போலவே அந்த இனத்தின் வரலாறும் முக்கியமானதாகும்.

ஓர் இனத்தின் சுதந்திர உணர்வை, வேட்கையை மழுங்கடித்து, அவர்களை அடிமைகளாக வைத்திருப்பதற்கு போர் நடத்தி, மக்களைக் கொல்வது மட்டும் வழியல்ல. அந்த இனத்தின் மொழி, கலை, பண்பாடு, வரலாறு என்பனவற்றை வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் சீரழித்தால் சுதந்திர உணர்வை அழித்துவிடலாம்.

அந்த மாற்றுவழியின் ஒரு வடிவமே, கபடமான திட்டமே, அரசாங்கமே பாடநூல்களை வெளியிடுவதும், இலவசப் பாடநூல் விநியோகமும் எனலாம்.

ஆகையால் நமது மாணவர்களுக்கென நாமே வரலாறு சம்பந்தமான பாடநூல்களை எழுதவேண்டியது ஒரு காலத்தின் தேவையாகக் கருதப்பட வேண்டும். உண்மையான வரலாற்றைக் கூறும் பாடநூல்களை எழுதவும், புகட்டவும் இப்போது மேற்கொள்ளப்படும் முயற்சிகள் சரியான வழிப்பட்டனவாகும்.

இதனை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதில், தமிழர்களின் வரலாற்றை மாசுபடாமல் காக்கும் பெருந்தொண்டும் கலந்திருக்கிறது என்பதனை மறந்து விடலாகாது. இப்பணியில் பல்கலைக்கழக வரலாற்று ஆசிரியர்கள், கல்விமான்கள், பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்குப் பெரும் பங்குண்டு என்பதைக் கூறத் தேவையில்லை. அவர்கள் தாமாகவே உணர்ந்து இப்பணியை ஆற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

"வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" நிலையம்:

# இந்திய எதிர்ப்புக்கு மத்தியில் இலங்கை நிறுவியே தீருமாம்

சிலாபம், இரணவில பகுதியில் "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" நிலையம் அமைக்கும் திட்டத்தைச் செயற்படுத்துவது தடைப்படமாட்டாது.

இப்படி கொழும்பில அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

"வொய்ஸ் ஒவ் அமெரிக்க" வானொலி நிலையம் அமைக்கும் திட்டத்துக்கு இந்தியா தெரிவிக்கும் எதிர்ப்பை கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் என். என். ஜா, இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத்தை கடந்த வாரம் சந்தித்து தெரிவித்தார்.

ராஜதந்திர ரீதியான காத்திரமான (Demarche) எதிர்ப்பை வாய்மூலமாக திரு. ஜா தெரிவித்தார் என்று அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் விரக்கூன் கருத்துத் தெரிவிக்கையில் —

"வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" [illegible]பனம் 1953இல் இருந்து இலங்கையைப் பயன்படுத்தி வருகிறது. இது புதிய விஷயம் அல்ல.

இப்போது அவர்கள் தங்கள் வானொலி நிலையத்தை சிலாபத்துக்கு மாற்ற முயற்சிக்கின்றனர். இந்தவானொலி நிலையம் இராணுவ நோக்கங்களுக்குப் பயனபடுத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

இராணுவ நோக்கங்களுக்கு "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" நிலையம் பயன்படுத்தப்படமாட்டாது என்று இலங்கை அளித்துள்ள உறுதிமொழியில் இந்தியா திருப்தி கொள்ளவில்லை என்று கொழும்பில் உள்ள ராஜதந்திர வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இந்தியா பலமாக ஆட்சேபித்து நடவடிக்கை எடுத்தால் ஒழிய. "வொய்ஸ் ஒவ் அமெரிக்க" வானொலி நிலையத்தை சிலாபத்தில் அமைப்பதற்கு அமெரிக்க அரசுக்கு இலங்கை அனுமதி வழங்கும் என்று தெற்காசிய ராஜதந்திரி ஒருவர் சொன்னார்.

இந்தியத் தூதுவர் ஆட்சேபம் தெரிவித்ததன் தொடர் நிகழ்வாகவே, அந்நாட்டு வெளியுறவுச் செயலாளர் திரு. துபே, இலங்கை வெளியுறவுச் செயலாளர் திரு பெர்னாட் திலகரத்னா கடந்த சனிக்கிழமை சந்தித்து "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" நிலையம் நிறுவுவது குறித்துக் கடும் ஆட்சேபம் தெரிவித்திருந்தார்.

இதே வேளை— சிலாபத்தில் "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" நிலையத்தை அமைக்க தாம் முன்னர் தெரிவித்த எதிர்ப்பை விலக்கிக் கொண்டு விட்டதாக சிலாபம் மேற்றிராணியார் பிராங்க் மார்க்கஸ் பெர்னாண்டோ தெரிவித்தார.

அந்த நிலையம் அமைக்கப்படவுள்ள பகுதியில் இருந்து மக்கள் வெளியேற்றப்படமாட்டார்கள் என்று அமெரிக்க தூதர் எழுத்து மூலம் அளித்த உறுதிமொழியைத் தொடர்ந்தே தனது எதிர்ப்பு வாபஸ் வாங்கப்பட்டதாகவும் சிலாபம் மேற்றிராணியார் தெரிவித்தார்.

### கும்பாபிஷேகம்

[illegible] றிகதலைச்சி அம்மன் கோவில் மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெற உள்ளது

★ ★ ★

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவில் மகாகும்பாபிஷேகமும் வியாழக்கிழமை காலை நடைபெறும.

(அ-31)

### தெரிவானோருக்கு கடிதங்கள்

கோப்பாய், ஜூலை 2

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற அதிபர் தரம் II, III ஆகியவற்றுக்கான நேர்முகப் பரீட்சைகளில் தோற்றி அதில் சித்தி அடைந்தவர்களுக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

[இ-72]

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 2

வட இலங்கை ஹோமியோபதிச் சங்கத்தால் நடத்தப்படும் 45 ஆவது கருத்தரங்கு 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு டாக்டர் அ. கிருஷ்ணசாமி தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறும்

(இ)

## இலங்கை உளவறியலாம் என இந்தியா அச்சம்

கொழும்பு, ஜூலை, 2

இந்திய அரசு தென் இந்தியக் கரையில் நீர்மூழ்கி நிலையம் ஒன்றை அமைத்துள்ளது நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு இடையே பரிமாறிக் கொள்ளப்படும் தகவல்கள் உளவறிய இலங்கையில் நிறுவப்படும் "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" வானொலி நிலையம் பயன்படுத்தப்படும்

இப்படி இந்தியா அச்சம் தெரிவித்துள்ளது. [இ-எ]

## பம்பாய் வெங்காயத்தில் நாட்டம் குறைந்தது

அராலி, ஜூலை, 2

அராலியில் இம்முறை பம்பாய் வெங்காயம் 20 முதல் 25 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே திட்டமிட்ட நிலப் பரப்பிலும் இது நான்கில் ஒரு பங்கு ஆகும்.

அராலிப் பகுதியில் கடந்த காலங்களில் பம்பாய் வெங்காயம் அளவுக்கு அதிகமாகப் பயிர் செய்யப்பட்டது.

இம்முறை தமிழ்ப் பகுதிகளின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவு பம்பாய் வெங்காயத்தையே பயிரிடுவது என்றும் ஏனைய நிலங்களில் சிறுதானியத்தை உற்பத்தி செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டிருந்தது

ஆனால் திட்டமிட்ட நிலப் பரப்பிலும் நான்கில் ஒரு பங்கிலேயே அதாவது சுமார் 20 முதல் 25 ஏக்கர் வரையிலான நிலப் பரப்பிலேயே பம்பாய் வெங்காயம் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பம்பாய் வெங்காயம் பயிரிட்ட விவசாயிகள் பாசிப்பயறு, குரக்கன் ஆகியவற்றைப் பயிரிடுவதில் அதிக நாட்டம் செலுத்தி வருகின்றனர்

[இ-12]

## 3 பிரிவுகளுக்கு ஒருவரே கடமையாற்றும் நிலை

### கிராமசேவையாளர் பற்றாக்குறை

தாளையடி, ஜூலை 2

வடமராட்சி கிழக்கில் ஒரு கிராம சேவையாளர். மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் கடமை புரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பல கிராம சேவையாளர் பிரிவுகள் வெற்றிடமாக இருப்பதே இதற்குக் காரணம்.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 18 கிராம சேவையாளர் பிரிவுகளில் 6 கிராம சேவையாளர் பிரிவுகள் வெற்றிடமாக உள்ளன.

மேலும் நான்கு கிராம சேவையாளர்கள் வடமராட்சி கிழக்கிலிருந்து இடமாற்றம் பெற்று தமது சொந்த இடங்களுக்குச் செல்ல விண்ணப்பித்துள்ளனர்.

(இ-144)

## வெடிமருந்து கொள்வனவு ஒழுங்கீனம் எனப்புகார்

### கணக்காய்வாளர் நாயகம் விசாரணை

கொழும்பு, ஜூலை 2

இலங்கைக் கடற்படைக்கு 4 கோடி 40 லட்சம் ரூபா மதிப்புக்கு வெடிமருந்து கொள்வனவு செய்வதில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஒழுங்கீனம் குறித்து கணக்காய்வாளர் நாயகம் விசாரணை நடத்த இருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது

கடற்படையினர் உபயோகிக்கும் 37 எம். எம். துப்பாக்கிகளுக்கு பாவிக்கவென இவ் வெடிமருந்து இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால் இப்போது இவ் வெடிமருந்து அத்துப்பாக்கிகளுக்குபொருந்தாதது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிடமிருந்து 35 ஆயிரம் சுற்று வெடி மருந்து ஷாங்காய் -2 ரக பீரங்கிப் படகுகளின் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்டது.

இது கடந்த ஆறு மாதங்களாக திருமலையில் பயன்படுத்தப்படாமல வைக்கப் பட்டுள்ளது.

(இ-எ)

## மரம் களவு போவதால் உப்பளம் அழிகிறது

கல்லுண்டாயில் தற்போது செயற்படாமல் இருக்கும் உப்பளத்தில் இருந்த பலகைகள், மரக் குற்றிகள் மற்றும் உப்பள அலுவலகக் கட்டடத்தில் இருந்த மரங்கள் போன்றவற்றை தினமும் மக்கள் எடுத்துச் செல்கின்றனராம்.

இம் மரப்பலகைகள், குற்றிகள் வியாபார நோக்குடன் மாட்டு வண்டிகளிலும், சைக்கிள்களிலும் எடுத்துச் செல்லப்படுகின்றன.

மரக்குற்றிகளை எடுப்பதற்காக உப்புப்பாத்தி மண் வெட்டப்படுவதால் உப்புப் பாத்திகளும் அழிந்து வருகின்றன என்று கூறப்படுகிறது..

(இ-12)

### பறிமுதல் செய்யப்பட்ட கப்பல் விவகாரம்

## பெல்ஜியம் - இலங்கை அரசுகளிடையே நெருக்கடி

11 ஆயிரம் ரொக்கட் மோட்டார்களுடன் பறிமுதல் செய்யபபட்ட "மார்தலினா' கப்பல் விவகாரம் தொடர்பாக பெல்ஜியம் அரசாங்கத்துக்கும் இலங்கை அரசுக்கும் இடையே இராஜதந்திர நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தாய்வான் நாட்டு விமானப் படைக்குத் தேவையான ரொக்கட் மோட்டார் ஆயுதங்களை எடுத்துச் சென்ற 'மார்தலினா' கப்பலையும் அதில் இருந்த ஆயுதங்களையும் பறிமுதல் செய்ய தகுந்த காரணங்கள் இலங்கை அரசுக்கு இல்லை என பெல்ஜியம அரசு வலியுறுத்தி வருகிறது.

(இ-எ)

## கடற்றொழில் ஊழியருக்கு 7 மாதங்களாக ஊதியம் இல்லை

யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகத்தைச் சேர்ந்த 20 ஊழியர்களுக்கு கடந்த 7 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை.

யாழ். செயலகத்தில் தற்காலிகமாக இயங்கி வரும் இந்த அலுவலகத்திற்குத் தேவையான அலுவலக உபகரணங்களை வாங்குவதற்குத் தேவையான நிதியும் அனுப்பி வைக்கப்படவில்லை. இதனால் இங்குள்ள உத்தியோகத்தர்கள் பல [illegible]களை எதிர் நோக்கி [illegible]யுள்ளது.

இவர்கள் பல முறை கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனைத் தொடர்ந்து இந்த அலுவலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் உயர் அதிகாரிகளைச் சந்திப்பதற்காக கொழும்பு சென்றுள்ளார்.

இதேவேளை கடற்றொழில் அலுவலகத்தின் 14 கிளைகள் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் செயற்பட்டு [illegible]

(த-100)

## கிளாட்ஸ்ரோன் விவகாரம்: ஐரோப்பிய சமூகம் கண்டனம்

இலங்கையில் இருந்து பிரிட்டிஷ் தூதுவர் திரு. கிளாட்ஸ்ரோனை வெளியேற்றியது தொடர்பாக ஐரோப்பிய சமூகம் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய சமூகம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், கிளாஸ்ட்ரோனை வெளியேற்றியது முறையற்ற ஒரு நடவடிக்கை என்றும், இந்த நடவடிக்கை இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான தனது அணுகு முறையில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி. சீ. ஈ. உயர் மாணவருக்கு பொதுப் பரீட்சை நடக்கும்

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் எதிர்வரும் ஆகஸ்டில் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் (91 ஆம் ஆண்டு) தோற்றவுள்ள ஆண்டு 13 மாணவர்களுக்குப் பொதுப் பரீட்சை ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டமனாறு வெளிக்கள நிலையம் நடத்தவுள்ள மேற்படி பொதுப் பரீட்சை எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

பல்வேறு காரணங்களினால் மேற்படி ஜி. சீ. ஈ. உயர்தர மாணவர்களுக்கான தவணைப் பரீட்சைகள் ஒழுங்காக நடைபெறவில்லை. எனவே அவர்களைப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் வகையில் இந்தப் பொதுப் பரீட்சையை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-5)

# ஐ. நா. அகதிகள் பிரிவு தொடர்ந்து பணிபுரியும்

யாழ்ப்பாணம், ஜூலை 2

எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை தமது அபிவிருத்தி வேலைகளை இலங்கையில் மேற்கொள்வதென ஐ. நா. அகதிகள் தூதரகம் முடிவு செய்துள்ளது.

ஜூன் மாதத்துடன் இந்த வேலைகள் யாவற்றையும் முடிக்க ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது.

ஜெனிவாவில் இந்த அமைப்பின் கூட்டம் கடந்த மாதம் நடைபெற்ற சமயம் இது விடயமாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

இலங்கையில் வடக்கு - கிழக்கில் ஐ. நா. அமைப்பின் பணி தேவையாக இருப்பதால் தொடர்ந்து கடமையாற்ற வேண்டியுள்ளதாக இலங்கைப் பிரதிநிதி டபிள்யூ. டி. கிளாரன்ஸ் எடுத்து விளக்கினார்.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் டிசம்பர் வரை சேவையாற்றுவதென முடிவு செய்யப்பட்டது. (ஒ 3)

# சிறிமாவோ கோரிக்கை

கூட்டுப்படைத் தலைமை அலுவலகத் தாக்குதல் தொடர்பாக நாட்டில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு நெருக்கடி நிலைமை பற்றி விவாதிக்க நாடாளுமன்றத்தை அவசரமாகக் கூட்டும்படி எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் பிரதமர் டி. பி. விஜேதுங்காவுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் திருமதி பண்டாரநாயக்காவின் கோரிக்கையை ஆதரித்து உள்ளன

நாடாளுமன்றம், முன்னர் தீர்மானிக்கப்பட்டபடி இம்மாதம் 9 ஆம் திகதி கூடவிருக்கிறது. (இ-எ)

முதலாவது

# பிறந்தநாள் வாழ்த்து



## ★ செல்வி சிந்து ★

இணுவில் கிழக்கைச் சேர்ந்த ஜேர்மனியில் வசிக்கும் ஜெயபாலன் சதீஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி சிந்து தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (02 - 07 - 1991) செவ்வாய்க்கிழமை ஜேர்மனி இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

அவரை ஜேர்மனியில் உள்ள அன்பு அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்மார். பிரசாத், பிரசன்னா, உதயன் மாமா, பிரான்ஸ் மோகன் மாமா, இணுவில் அம்மப்பா, அம்மம்மா, சாந்தி சித்தி, வதனி சித்தி, தாவடி அப்பப்பா, அப்பம்மா, குமார் சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சிவகாமி அம்மன் அருள் பெற்று சகல செல்வங்களுடனும் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

''பிருந்தாவனம்''
இணுவில் கிழக்கு. (17371)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 2 - 07 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சின்னமடுவில் காவலரண் மீது புலிகள் தாக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 2

கடந்த சனிக்கிழமை இரவு ஊர்காவற்றுறை - சின்னமடு முகாம் காவலரண் மீது விடுதலைப் புலிகள் அருள் - 89 தாக்குதலை நடத்தினர்.

படையினர் குடிமனைகளை நோக்கி 50 கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டனர். புளியங்கூடல் சந்தியை நோக்கி ஷெல் வீச்சும் நடத்தப்பட்டது. [ஒ-3]

# 4 வீடுகள் எரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

முல்லைத்தீவு, வட்டுவாகல் பகுதியில் 4 வீடுகளைப் படையினர் தீ வைத்து எரித்து நாசமாக்கினர்.

அப்போது விடுதலைப் புலிகள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இரு சாராருக்கும் இடையே நடந்த மோதலைத் தொடர்ந்து படையினர் பின்வாங்கிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 2

இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினை (வளைகுடா யுத்தத்தின் பின்னுள்ள நிலைமை) என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ். பல்கலைக்கழக புவியியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக புவியியற் கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ள மேற்படி கருத்தரங்கில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை உரையாற்றவுள்ளார். (ஒ-5)

# வீரமரணம்

ஆனையிறவில் நேற்று இடம்பெற்ற மோதலின போது வீரவேங்கை சிவானந்தன் (நடராசா நகுலேஸ்வரன்—ஜெயந்திநகர் கிளிநொச்சி) வீரமரணமடைந்தார். (ஒ-3)

# ஷெல் தாக்கு; வீடுகள் சேதம்

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் ஆனையிறவு முகாமிலிருந்து இயக்கச்சி, மாசார், சங்கத்தார்வயல் பகுதிகளை நோக்கி ஷெல்கள் ஏவிவிடப்பட்டன.

இயக்கச்சி வை.எம்.சீ,ஏ. குடியேற்றத் திட்டப் பகுதியில் பல ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இப்பகுதி மக்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்துவிட்டதால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை வீடுகள் பல சேதமடைந்தன. (ஒ-117)

# இராணுவத்தை விலக்க முடிவு

ஒருதலைப்பட்ச சுதந்திர பிரகடனத்தை அமுல் செய்வதை மூன்று மாதங்களுக்கு ஒத்திவைக்க குறோஷியா மற்றும் ஸ்லோவேனிய மாநில குடியரசுகள் இணங்கியுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து ஸ்லோவேனியாவுக்குள் அனுப்பிய தமது இராணுவத்தை விலக்கிக் கொள்ள யூகோஸ்லேவிய சமஷ்டி அரசு முன்வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (அ-எ)

# திடீர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலாக இருக்கலாம். அல்லது ஜனாதிபதித் தேர்தலாக இருக்கலாம். மாகாண சபைத் தேர்தலாகவும் அது இருக்கக்கூடும்.

இப்படி அவர் சொன்னார்.

தேர்தல் ஒன்றை எந்த நேரத்திலும் நடத்த தாம் தயாராக இருப்பதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளது. (இ-எ)

# அஸாமில் 11 பேர் கடத்தல்

புதுடில்லி, ஜூலை 2

அஸாம் மாநிலத்தில் நேற்று பதினொரு பேர் கடத்தப்பட்டனர். அவர்களில் இருவர் உயர் அதிகாரிகள் ஆவர்.

இவர்களை அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணி [அல்பா] தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்களே கடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடத்தப்பட்டவர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சி நேற்றுக் காலையிலிருந்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது. [அ]

# ஷெல் வீச்சில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

பலாலி முகாமில் இருந்து நேற்று மாலை 5 மணி தொடக்கம் மாவிட்டபுரம், தெல்லிப்பளைப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

தோட்டத்தில் வேலை செய்த கொண்டிருந்த அளவெட்டி வடக்கைச் சேர்ந்த தர்மராசா ஸ்ரீகுமார் [16 வயது] ஷெல் வீச்சுக்கு இலக்காகி படுகாயமடைந்தார். (ஒ-15)

# அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 2

தீவுப்பகுதி மக்களின் நன்மைகருதி ''வலம்புரி'' படகை சேவையில் ஈடுபடுத்த தந்துதவுமாறு யாழ். அரச அதிபர், காரைநகர் கடற்படைத் தளபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

புனர்வாழ்வு அமைச்சால் வழங்கப்பட்டிருந்த இந்தப் படகு இப்போது கடற்படை வசமுள்ளது தெரிந்ததே.

சேவையில் ஈடுபட்டிருந்த குமுதினிப் படகும் திருத்த வேலைகளுக்காகச் சேவையில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

# மருந்தகம் பழைய இடத்தில்

யாழ். போதனா வைத்தியசாலையின் உள்ளக மருந்தகம் மீண்டும் பழைய இடத்தில்இயங்கஆரம்பித்துள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## விசுவநாதர் ஏகாம்பரமூர்த்தி

[அதிபர், யாழ். தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம்]

அராலி மேற்கைச் சேர்ந்தவரும் மூளாயில் வசிப்பவருமாகிய திரு. விசுவநாதர் ஏகாம்பரமூர்த்தி 1-7-91 நேற்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் திருமதி பத்மராணி [உதவி வைத்திய உத்தியோகத்தர், A. M. O] அவர்களின் ஆருயிர் கணவரும் திரு. விசுவநாதர் ஆசிரியர் அவர்களின் அருமை மகனும், திரு. வி. கந்தையா பென்சனர் [மூளாய்] அவர்களின் அருமை மருமகனுமாவார். இவர் காலஞ்சென்ற சாட்குண்ணியமூர்த்தியின் தம்பியும் வைத்திய கலாநிதி பூ. கயிலாயநாதன் சுழிபுரம், திரு. மனோகரன் குமாரசாமி [Barrister லண்டன்], திரு. ச. தனராஜ் [தொழில் நுட்ப உத்தியோகத்தர், மாதகல்]. திரு. கி. முருகதாசன் [விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர், வட்டுக்கோட்டை] இவர்களின் அன்புச் சகோதரருமாவார். இவர் திருமதி கனகாம்பிகை [திட்டமிடல் அமுலாக்க உத்தியோகத்தர்] திருமதிகள் ஜெயராணி [லண்டன்], ஞானாம்பிகை, இந்திராணி [ஆசிரியை], கமலாம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஒரு மணியளவில் மூளாயில் நடைபெறும்

தகவல்:
திருமதி பத்மராணி ஏகாம்பரமூர்த்தி
[மனைவி]
[17138]

## இலட்சுமணபிள்ளை பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய விதானையார், சரவணை மேற்கு)

சரவணையைச் சேர்ந்த இளைப்பாறிய விதானையார் இலட்சுமணபிள்ளை பாலசுப்பிரமணியம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற இலட்சுமணபிள்ளை ஐயாத்தைப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, குணரத்தினசிங்கம், காராளசிங்கம் (இளைப்பாறிய அதிபர்), சபாரத்தினசிங்கம் ஆகியோரின் சகோதரரும், ஞானசக்தியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், சதாரூபவதி, சத்தியரூபவதி, கலாரூபவதி, கனகரூபவதி, கலாநிதி சிவகடாட்சம் (சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம் விவசாய பீடம்), சிவபாலன் (நிதி உதவியாளர் கோட்டக்கல்வி அலுவலகம் வேலணை), வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராஜசிங்கம், குணரத்தினம், போகராசா, சிவநாதன், மேரிசெல்வரி, பவானி (ஆசிரியை திருக்குடும்ப கன்னியர்மடம் யாழ்ப்பாணம்), இராசேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவதாஸ் [சிமெந்துக் கூட்டுத்தாபனம்], சந்திரதாஸ், கண்ணதாஸ், உமாராணி, குமரசிறி (விரிவுரையாளர் மட்டக்களப்பு), விமலசிறி, ஜெயசிறி, கீதா, சுமதி (ஆசிரியை காக்கையன்குளம் ம. வி), சசி, சக்தி, சிவரூபன், சிவகாந்தன், சிறிகாந்தன் சிவானுஜ, சிவப்பிரியா, சிவதர்சினி, பாமினி, சிவசத்தியா, சிவப்பிரசாந்த், சிவசெந்தூரன், வினோதினி ஆகியோரின் அன்புப் பேரனும். சைனுகா, விரூபன், கஜேன், சிறிசங்கர், சிறிராம், டீபிகா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கை 18ஆம் இலக்க இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக இன்று (2-7-91) காலை பத்து மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. சிவகடாட்சம்
(17137)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org